தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
1989 பிப்ரவரி 13, திங்கட்கிழமை
மாசி 2, விபவ—திருவள்ளுவர் ஆண்டு 2020

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய பேரவைக் கூட்டத்தை இனிமையிலிருந்து தொடங்குகிறேன்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

இனிய சொற்கள் ஏராளமாகவும், தாராளமாகவும் இருக்கும் போது அவற்றை விட்டு, இனிமையல்லாத சொற்களைக் கூறுதல், சுவை நலம் மிகுந்த கனிகள் பல இருக்கும்போது அவற்றை விட்டு, சுவையும் பயனும் தாராத காய்களைப் பறித்துத் தின்பது போன்றதாகும்.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கீழ்க்கண்ட முன்னாள் உறுப்பினர்கள் மறைந்ததைக் குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். 19 உறுப்பினர்களைப் பற்றிய குறிப்புகள் இவற்றுள் அடங்குகின்றன.

திரு. அ. கிருஷ்ணன், 4—2—1988-ல் மறைந்திருக்கிறார். தென் ஆற்காடு மாவட்டம் மங்களூர் தொகுதியைச் சேர்ந்தவர். 1967 முதல் 1971 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. டி. சம்பத், 16—2—1988-ல் மறைந்திருக்கிறார். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தொகுதியைச் சார்ந்தவர். 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

திரு. கே. இரா. ஞானசம்பந்தன், 20—2—1988-ல் மறைந்து இருக்கிறார். தஞ்சாவூர் மாவட்டம் நாகப்பட்டினம் தொகுதியைச் சார்ந்தவர். 1967 முதல் 1971 வரை உறுப்பினர்.

திரு. அ. செல்லப்பா, 23–5–1988-ல் மறைந்திருக்கிறார். தஞ்சாவூர் மாவட்டம் வலங்கைமான் தொகுதியைச் சார்ந்தவர். 1977 முதல் 1980 வரை உறுப்பினர்.

திரு. பி. முசிறிப்புத்தன், 27–5–1988 அன்று மறைந்திருக்கிறார். 1977 முதல் 1980 வரை திருச்சி மாவட்டம் முசிறி தொகுதியிலும், 1980 முதல் 1984 வரை திருச்சி-1 தொகுதியிலும், 1984 முதல் 1988 வரை திருச்சி மாவட்டம் குளித்தலைத் தொகுதியிலும் உறுப்பினர். 1979 முதல் 1980 வரை வருவாய்த் துறை அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றியுள்ளார்.

திரு. எம். கல்யாணசுந்தரம், 20–6–1988-ல் மறைந்திருக்கிறார். 1952 முதல் 1957 வரை திருச்சி மாவட்டம் திருச்சி (வடக்கு) தொகுதி; 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை திருச்சி-2 தொகுதி உறுப்பினர். 1971 முதல் 1979 வரை பாராளுமன்ற மக்களவை உறுப்பினர்; 1980 முதல் 1986 வரை பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்.

திரு. எஸ். சி. சடையப்ப முதலியார், 24–6–1988-ல் மறைந்திருக்கிறார். வட ஆற்காடு மாவட்டம் அரக்கோணம் தொகுதி; 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

திரு. எம். முத்துசாமி நாயகர், 1–7–1988 அன்று மறைந்து இருக்கிறார். செங்கல்பட்டு மாவட்டம் செங்கல்பட்டு பொதுத் தொகுதி; 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

திரு. டி. விஜயராஜ், 22–7–1988 அன்று மறைந்திருக்கிறார். வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை தொகுதி; 1967 முதல் 1971 வரை உறுப்பினர்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன், 3–8–1988 அன்று மறைந்திருக்கிறார். மதுரை கிழக்குத் தொகுதி உறுப்பினர். 1971 முதல் 1976 வரை உறுப்பினராக இருந்திருக்கிறார்.

திரு. கே. வாசுதேவன், 7–8–1988 அன்று மறைந்திருக்கிறார். திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தொகுதி; 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

திரு எம். பன்னீர்செல்வம் 26–8–1988 அன்று மறைந்திருக்கிறார். வட ஆற்காடு மாவட்டம் ஆம்பூர் தொகுதியில் 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை உறுப்பினர்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1989 பிப்ரவரி 13] (பேரவைத் தலைவர்)

திரு. எச். அப்துல் மஜீத், 1–9–1988 அன்று மறைந்திருக்கிறார். வட ஆற்காடு மாவட்டம், வாணியம்பாடி தொகுதியில் 1985 முதல் 1988 வரை உறுப்பினர்.

திரு. மா. வெ. கரிவேங்கடம் 11–9–1988 அன்று மறைந்திருக்கிறார். 1962 முதல் 1967 வரை பெண்ணாகரம் தொகுதி, 1971 முதல் 1976 வரை பாலக்கோடு தொகுதி உறுப்பினர்.

திரு. எஸ். பி. பி. பட்டாபிராம ராவ் 21–9–1988 அன்று மறைந்திருக்கிறார். 1952 முதல் 1953 வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் பாமரு தொகுதி உறுப்பினர். 1952-53-ன் சென்னை மாநிலத்தின் அமைச்சர். 1954-55, 1956-60 மற்றும் 1960-62-ல் ஆந்திர மாநிலத்தின் அமைச்சர், 1982–84-ல் மத்திய அமைச்சரவையின் இணையமைச்சராகப் பணியாற்றியுள்ளார்.

திரு. வெ. து. அண்ணாமலை 5–10–1988 அன்று மறைந்து இருக்கிறார். வட ஆற்காடு மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, 1967 முதல் 1971 வரை உறுப்பினர்.

திரு. ஆர். ரெங்கசாமி 9–12–1988 அன்று மறைந்திருக்கிறார். அன்றைய திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தொகுதி, 1985 முதல் 1988 வரை உறுப்பினர்.

திரு. எம். கே. டி. நடராசன் 18–1–1989 அன்று மறைந்திருக்கிறார். திருச்சி மாவட்டம், இலான்குடி தொகுதி, 1967 முதல் 1971 வரை உறுப்பினர். 1972 முதல் 1978 வரை தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினர்.

திரு. எம். கே. மாரியப்பன் 28–1–1989 அன்று மறைந்திருக்கிறார். அன்றைய சேலம் மாவட்டம், அரூர் தொகுதி, 1957 முதல் 1962 வரை உறுப்பினர்.

மறைந்த உறுப்பினர்கள் அனைவரும், இப்பேரவையில் நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னார்களின் மறைவினால் அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு மணித் துளிகள், மௌனமாக எழுந்து நின்றனர்.)